ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில், Gas Kitchen இருக்கிறது; சமையலாளரும் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆனால், உணவு இதுவரை கொடுக்கப்படவில்லை. இந்தக் குறைபாடு அரசினுடைய கவனத்திற்கு வந்தவுடன், உடனடியாக ரொட்டி, பால் கொடுப்பதற்கான ஏற்பாட்டை நான் செய்யச் சொல்லியிருக்கிறேன். மற்றபடி உள் நோயாளிகளுக்கு சாப்பாடு போடுவதற்கு அரிசி மற்றும் சமையல் பொருட்கள் வாங்குவதற்கான அனுமதிக்காக சம்பந்தப்பட்ட இணை இயக்குநரை, அரசுக்கு Proposal அனுப்பச் சொல்லியிருக்கிறோம். அது முடிந்தவுடன் அங்கே உள் நோயாளிகளுக்கு உணவு வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கணேசன், முடிந்துவிட்டது. (குறுக்கீடு) அமைச்சரிடம் தனியாகக் கேட்டுக்கொள்ளுங்கள்.

வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

குறுவைப் பயிரைப் பாதுகாக்க காவிரி நீரை கர்நாடக மாநில அரசு திறந்துவிட வேண்டியது பற்றி விவாதிக்க அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற இருப்பது குறித்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகின்றது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ந. தள்வாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் காவிரி டெல்டா பகுதியில் உள்ள தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் குறுவை

2001 செப்டம்பர் 7] [திரு. ந. தளவாய் சுந்தரம்]

நெற்பயிர் பயிரிடப்பட்டு, அதற்காக காவிரித் தண்ணீர், மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து கடந்த 12—6—2001 முதல் திறந்து விடப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வருடமும் காவிரி நதிநீர்ப் பங்கீட்டு நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையின்படி கர்நாடக மாநிலம் ஆண்டுதோறும் தமிழகத்திற்கு 205 டி.எம்.சி. அடி நீர் வழங்க வேண்டும். இந்த ஆண்டு 6.9.2001 வரை வழங்க வேண்டிய 113.93 டி.எம்.சி. அடி நீரிலே 50.73 டி.எம்.சி. அடி நீர் மட்டுமே திறந்து விடப்பட்டுள்ளது. ஆகவே, இன்னும் தமிழ்நாட்டிற்கு கர்நாடக மாநிலம் 63.20 டி.எம்.சி. அடி நீர் வழங்க வேண்டியுள்ளது. தற்போது மேட்டூர் அணையின் தண்ணீர் இருப்பு மிகவும் குறைந்த நிலையில், அதாவது மேலும் 9 நாட்களின் தேவையை மட்டுமே நிறைவு செய்யும் வகையில் 13.80 டி.எம்.சி. அடியாகக் குறைந்துள்ளது. தஞ்சை டெல்டா பகுதியில் 3.9 இலட்சம் ஏக்கரில் குறுவை நெற்பயிர் பயிரிடப்பட்டுள்ளன. விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்திலே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ஏற்கெனவே 27—7—2001 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் அவர்களுக்கும் கடிதங்களை எழுதியிருந்தார்கள். மேலும், கடந்த 23—8—2001 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், மாண்புமிகு கர்நாடக மாநில முதலமைச்சர் திரு. எஸ்.எம். கிருஷ்ணா அவர்களுக்கும் கர்நாடக மாநிலம் உடனடியாக கர்நாடக நீர்த் தேக்கங்களிலிருந்து தண்ணீரைத் திறந்துவிட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, மீண்டும் கடிதம் எழுதியிருந்தார்கள். மேலும், காவிரி நதிநீர்ப் பங்கீட்டு மன்றத்தின் இடைக்கால ஆணையின்படி இரு மாநிலங்களுக்கும் இடையே தண்ணீர் விடப்படுகின்ற அளவினைக் கண்காணிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட மத்திய கண்காணிப்புக் குழுவின் அவசரக் கூட்டத்தையும் உடனடியாகக் கூட்ட வேண்டுமென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியிருந்தார்கள்.

அதனடிப்படையில், 6.9.2001 அன்று புது டெல்லியில் காவிரி நீர் பங்கீட்டுப் பிரச்சினை தொடர்பான மத்திய கண்காணிப்புக் குழுவின் கூட்டம் நடைபெற்றது. அதில் தமிழகத்தின் சார்பாக தலைமைச் செயலாளர் மற்றும் பொதுப் பணித் துறைச் செயலாளர் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்துகொண்டார்கள். துரதிருஷ்டவசமாக, இந்தக் கூட்டத்திலும் தமிழ்நாட்டிற்குக் கூடுதல் தண்ணீர் கர்நாடக மாநிலத்திலிருந்து விடுவதுபற்றி எந்த நல்லதொரு முடிவும் எடுக்கப்படவில்லை.

[திரு. ந. தளவாய் சுந்தரம்] [2001 செப்டம்பர் 7

முற்பகல் 11-05

இதன் விளைவாக காவிரி டெல்டா மாவட்டங்களில் நிலவுகின்ற அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, தமிழக விவசாயிகளுக்குக் கூடுதல் தண்ணீரைக் கர்நாடக மாநிலத்திலிருந்து பெற்றுத் தர வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் பொருட்டு, இது தொடர்பான அளைனத்து அம்சங்களையும் உடனடியாக விவாதிப்பதற்கும், அடுத்து இந்தப் பிரச்சினையில் தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை முடிவு செய்யவும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 8-9-2001 அன்று சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் ஒன்றை சென்னையில் கூட்டியுள்ளார்கள். இந்தக் கூட்டம் சென்னை, தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையில், பத்தாவது மாடியில் உள்ள கூட்ட அரங்கத்தில் நடைபெறும்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி.கே. மணி, திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் விவாதம் கூடாது.

3. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 30 – பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்

(ஆ) கோரிக்கை எண் 31 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன்

– –

(அ) கோரிக்கை எண் 30 – பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2001-2002* ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 30-பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.